

திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, கனகதாரா திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருந்துப் பெட்டகங்களை வழங்கினார். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, முத்தூர் பேரூராட்சி தலைவர் சுத்தராம்பாள், துணைத் தலைவர் மு.க.அப்பு, முன்னாள் துணை தலைவர் பௌதியப்பன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை, வடவள்ளி, மருதமலை சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு உயர் சிறப்பு இலவச மருத்துவ முகாமை மாநகர் மாவட்டச் செயலாளர் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் பங்கேற்று பார்வையிட்டார். இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# அமெரிக்க அதிபர் டிரம்பிடம் - மீண்டும் அடிபணிந்த மோடி!

**அ**மெரிக்காவின் இந்தியா மீதான 50% வரிவிதிப்பு, இந்திய ஏற்றுமதியின் முதுகெலும்பை முறிக்கும் அதிபர் டிரம்ப் அவர்களின் செயலை கை கட்டி வேடிக்கை பார்க்கும் ஒன்றிய மோடி அரசு!

கொங்கு மண்டலமாம், திருப்பூரின் வாழ்வாதாரமாக விளங்கும் , ஜவுளி ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பை, கண்டும் காணாமல் இருக்கும், ஒன்றிய "எஜமானர்களை" கண்டிக்க மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டுகோள் கூட விடுக்கத் தயங்கும் பழனிச்சாமி!!

அறிவார்ந்தவர்கள்

தேவை...அவை இல்லாதவர்கள் அல்ல!

'தேவை ஓர் Maran..

(Moron's) அல்ல' என்கிற தலைப்பில் சமூகவலைதள ஆர்வலர் விக்னேஷ் ஆனந்த் அவர்களின் டிவிட்டர் பதிவு வருமாறு:-

தமிழாக்கம்:
**வே. கௌதமன்,**
மாநிலத் துணை செயலாளர்,
கழக விளையாட்டு
மேம்பாட்டு அணி.



**இ**ந்தியாவின் ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சராக (1999-2002) இருந்த முரசொலி மாறன், சியாட்டிலிலும் (1999) தோஹாவிலும் (2001) நடந்த உலக வர்த்தக அமைப்பின் (WTO) மாநாடுகளில் குறிப்பி டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி னார், இது இந்தியாவின் நிலைப்பாட்டை வலுப்படுத்தி, வளரும் நாடுகளின் நலன்களைப் பாதுகாத்தது.

அவரது முக்கிய சாதனைகளில் பின்வருவன அடங்கும்:

**வளரும் நாடுகளின் குரல்:** சியாட்டில் மாநாட்டில், வளர்ந்த நாடுகளின் ஒருதலைப்பட்ச வர்த்தகக் கொள்கைகளுக்கு (G7/ G8) எதிராக வளரும் நாடுகளை ஒன்றிணைத்து, அவர்களின் வர்த்தக உரிமைகளை வலியுறுத்தினார். தோஹாவில், அவர் WTO ஒப்பந்த ஏற்றத்தாழ்வுகளை சவால் செய்தார், வளரும் நாடுகளின் குரல்களுக்கு முன்னுரிமை அளித்தார், அவர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்தினார் மற்றும் விவசாயம், தொழில் மற்றும் அறிவுசார் சொத்துரிமை களில் (IPR) பேரம் பேசும் சக்தியை மேம்படுத்தினார்.

**விவசாய மானியங்களுக்கு எதிர்ப்பு:** வளர்ந்த நாடுகளின் விவசாய மானியங்கள் மற்றும் வர்த்தகத்தை சிதைக்கும் நடைமுறைகளை மாறன் எதிர்த்தார், இது வளரும் நாடுகளில் விவசாயிகளுக்கு பாதகமாக இருந்தது. அவரது முயற்சிகள் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து விவசாயப் பொருட்களுக்கு நியாயமான சந்தை அணுகலைப் பெற்றுத் தந்தன.

**அறிவுசார் சொத்துரிமைகள் (IPR) மற்றும் மருந்து களுக்கான அணுகல்:** உலக வர்த்தக அமைப்பின் TRIPS ஒப்பந்தத்தின் கீழ் காப்புரிமை விதிகளை தளர்த்துவதற்காக வும், மலிவு விலையில் மருந்து உற்பத்தியை செயல்படுத்து வதற்காகவும், வளரும் நாடுகளில் ஏழை மக்களுக்கு அணுகலை மேம்படுத்துவதற்காகவும் மாறன் வாதிட்டார்.

**உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தங்களின் மறுஆய்வு:** வளரும் நாடுகளுக்கு பாதகமான உருகுவே சுற்று ஒப்பந்த ங்களை மறுபரிசீலனை செய்ய அவர் வலியுறுத்தினார், அவை பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைக்கவும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு நெகிழ்வுத்தன்மையை வழங்கின.

**தோஹாவில் இந்தியாவின் தலைமை:** மாறன் இந்தியாவை வளரும் நாடுகளின் தலைவராக நிலைநிறுத்தினார், சீனாவின் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினரை ஆதரித்தார் மற்றும் வளர்ந்த நாடுகளின் பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கி னார், மூன்றாம் உலக நாடுகளின் பேச்சுவார்த்தை சக்தியை வலுப்படுத்தினார்.

**மூன்றாம் உலக நாடுகளுக்கான நன்மைகள்:**

**நியாயமான வர்த்தக வாய்ப்புகள்**: மாறனின் முயற்சிகள் நியாயமான உலகளாவிய சந்தை போட்டியை உறுதி செய்தன.

**மருந்துகளுக்கான அணுகல்:** TRIPS தளர்வுகள் ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் மலிவு விலையில் மருந்து அணுகலை மேம்படுத்தின.

**வளரும் நாடுகளின் ஒற்றுமை:** அவரது தலைமை ஒரு வலுவான WTO கூட்டணியை வளர்த்தது, பேரம் பேசும் சக்தியை அதிகரித்தது.

**உள்நாட்டு தொழில்களின் பாதுகாப்பு:** அவரது கொ ள்கைகள் வளரும் நாடுகளுக்கு பொருளாதார சுயாட்சியைப் பாதுகாத்தன.

**தற்போது 2025 இல், தொலைநோக்கு பார்வை இல்லாத திறனற்ற ஒன்றிய அரசு, பேச்சுவார்த்தைத் திறன்கள் இல்லாமை மற்றும் ராஜதந்திரமின்மை காரணமாக பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கம் அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு மீண்டும் அடிபணிந்தது.**






# திமுக இளைஞர் அணி

## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.5,00,000/– வழங்கினார்.

**க**ழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஜூலை மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 20 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1 | சு.சங்கீதா, க/பெ சுரேஷ், 44/127, பம்பிங் ஸ்டேஷன் சாலை, அண்ணா சாலை, சென்னை – 600 002. |
| 2 | சை.அப்துல் சமது, த/பெ சையத் இப்ராகிம், 60, தங்கமலைக் கரடு, கலிங்கியம், கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு – 638 453. |
| 3 | செ.லோகேஸ்வரி, க/பெ செந்தில்குமார், 9–13, மஸ்தி தெரு, பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004. |
| 4 | சா.வீரமணி, த/பெ சாராஜன், 6/94–பி, எஸ்.என்.பெருமாள் நகர், மணவிளை, சுசீந்திரம், கன்னியாகுமரி – 629 704. |
| 5 | து.குமரகுருபரன், த/பெ துரைபாண்டியன், 18–ஏ, வடக்கு மேட்டுத் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005. |
| 6 | பா.ரா.தீபக், த/பெ ராமு, 226, 13–வது தெரு, சௌத்ரி நகர், வளசரவாக்கம், சென்னை – 600 087. |
| 7 | தி.அற்புதமணி, க/பெ திருமால், மரப்பேட்டை வீதி, உடுமலை சாலை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் – 642 001. |
| 8 | ரா.ராமசாமி, த/பெ ராமர், 161, அம்பேத்கர் நகர், பையர்நத்தம், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி – 636 905. |
| 9 | பி.ஹர்சன், த/பெ பிரேம்குமார், 21, கே.எஸ்.நகர், 19–வது தெரு, புழல் காவாங்கரை, சென்னை – 600 060. |
| 10 | மு.வெங்கடேசன், த/பெ முனுசாமி, 32, அக்கையா நாயுடு பிரதான சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209. |
| 11 | சொ.சரண்யா, க/பெ சொரிமுத்து, 5/13, ஆசாரியார் தெரு, ஆலங்குளம், தென்காசி – 627 851. |
| 12 | க.கணபதி, த/பெ கண்மணி ராஜா, 6, பெருமாள் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை – 600 081. |
| 13 | த.சம்பத், த/பெ தங்கவேல்பிள்ளை, 119/1, சன்னதித் தெரு, திருப்புலிவனம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் – 603 406. |
| 14 | ப.தாண்டமுத்து, த/பெ பழனிமுத்து, 1/42, மாரியம்மன் கோயில் தெரு, ஆசூர், குன்னம், பெரம்பலூர் – 621 708. |
| 15 | க.மகாதேவன், த/பெ கணேஷ், 5, சாஸ்திரி தெரு, கீழ் அயனம்பாக்கம், திருவேற்காடு, திருவள்ளூர் – 600 095. |
| 16 | தா.வரிசா இசாஜ், த/பெ தாஜூத்தீன், 101, அன்சாரி நகர், முதல் குறுக்குத் தெரு, மகபூப்பாளையம், மதுரை – 625 016. |
| 17 | க.கர்ணமுருகன், த/பெ கருப்பையா, 2/220–1, மேட்டுக்காரான், முத்துப்பேட்டை, காரான், இராமநாதபுரம் – 623 523. |
| 18 | ச.இந்துமதி, த/பெ சந்திரசேகரன், 79/3/6, அம்மன் நகர், சின்னியம்பாளையம், மொடக்குறிச்சி, ஈரோடு – 638 104. |
| 19 | சு.சேகர், த/பெ சுப்பையா, 3/282, கருப்பராயன் கோயில் வீதி, ஆத்துப்பாளையம், திருமுருகன்பூண்டி, திருப்பூர் – 641 652. |
| 20 | சு.ப.பரணிதரன், த/பெ பரமேஸ்வரன், 7–1/17, நாராயண நகர், முதல் தெரு, குமாரபாளையம், நாமக்கல் – 638 183. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 03.09.2025

கலைஞர் 100
1924 - 2023




கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, வேடப்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை பேரூராட்சி தலைவர் ரூபிணி ஜெயபால் முன்னிலையில் வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு உடனடி ஆணையினை வழங்கினார். இதில் பேரூர் கழக செயலாளர் இரா. தண்டபாணி, பேரூராட்சி துணைத் தலைவர் செல்வமணி உள்பட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் ஒன்றியம், காரகுப்பம் கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் இருப்பதால் விவசாயிகள், பொதுமக்கள் பாதிப்படைந்த நிலையில் உயர் மின் அழுத்த ட்ரான்ஸ்பார்மர் அமைத்து தரவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக 100 கிலோவாட் திறன் கொண்ட டிரான்ஸ்பார்மர் அமைக்கப்பட்டது. இந்த டிரான்ஸ்பார்மரை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் துவக்கி வைத்து பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தார். முன்னதாக இலக்கிய அணி பாலாஜி ஏற்பாட்டில் பர்கூர் பார்வையற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் பள்ளிகளில் அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் பாலன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர், பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், பேரூராட்சித் தலைவர் சந்தோஷ் குமார் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட நல்லட்டிபாளையம் ஊராட்சி அர்ஜுன் கல்லூரியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு உடனடி ஆணையினை வழங்கினார். இதில் கிணத்துக்கடவு வடக்கு ஒன்றிய செயலாளர் துரை, மாவட்ட பொருளாளர் தண்டபாணி, பட்டணம் நடராஜ், தாமரைக்குளம் அனுதீப், மனோஜ்குமார், நல்லட்டிபாளையம் ரவி, செட்டிக்காபாளை யம் நாச்சிமுத்து உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.